

ISSN : 2349 - 1914

# நடே இதழ்

பன்னாட்டு ஆய்விதழ்

International Journal

நவம்பர் 2025 மலர் – 12 இதழ்–11

ISSN : 2349 - 1914


## ஆசிரியர் குழு

- முனைவர் **மதுரை வீரன்** மாநிலக் கல்லூரி, சென்னை.
- முனைவர் **நீல.மாதவன்** காஞ்சி சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
- முனைவர் **மு.சற்குணவதி,** முனைவர் **ஆ.ஏகாம்பரம்**
  சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
- முனைவர் **ந. கலைவாணி,** முனைவர் **மா.லோகநாயகி**
  இராணிமேரி கல்லூரி, சென்னை.
- முனைவர் **மு. கலைமாமணி,**
  அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை.
- **திருமதி. சி. சுப்புலெட்சுமி**
  Ministry of Education • 1 North Buona Vista Drive, Singapore 138675
- திருமதி. விஜயராணி மூர்த்தி
  1,Strathmore Road Singapore 148800
- **திருமதி. தமிழரசி சுப்பிரமணியம்**
  Master Teacher for Tamil Language,Language Centre, 2 Beatty Road, Singapore
- **Mrs Silambayee Muthusamy**
  Ministry of Education • 1 North Buona Vista Drive, Singapore 138675
- முனைவர் **ப.கமலக்கண்ணன்** முனைவர் **சி.அங்கயற்கண்ணி**
  சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு.
- **ம.பிரகாஷ், அ.ரேவதி**
  ஆய்வாளர்கள், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
- **த. இராஜீவ் காந்தி**
  ஆய்வாளர், இராணிமேரி கல்லூரி, சென்னை.
- Mr. **Srinivasan Ramachandran**
  Dr. Ambedkar Centre for Economic Studies, University of Madras. Chennai.
- **Dr. S. Sivakumar**
  Dr. Ambedkar Govt. Law College, Madras High Court Campus, Chennai.

## வடிவமைப்பு

**வி.ஷீலா**



Owned, Printed and Published by R. Babu from No: 192, Bells Road, SR Complex, Ist Floor, Chepauk, Chennai-5 Printed at Today Printers,192, Bells Road, SR Complex, Ist Floor, Chepauk, Chennai-600 005 Editor. R. Babu

அலுவலகம்

192, பெல்ஸ் சாலை, எஸ்.ஆர். காம்ப்ளக்ஸ்
சேப்பாக்கம், சென்னை – 600 005.
போன். : 044–28553797, செல்: 9840083738 Email: todaybabu@gmail.com, babu_today@yahoo.com

| | | |
|---|---|---|
| 14. | சங்க இலக்கியத்தில் மருத்துவம் <br> – தி. கல்பனாதேவி | 72 |
| 15. | ஈழத்தின் தமிழிசை மரபு <br> – த. ராபர்ட் அருட்சேகரன் | 81 |
| 16. | மகளிர் மேம்பாட்டில் மனவளக்கலையின் பங்கு <br> – க. இராஜேஸ்வரி முனைவர் க. பிரசாத் | 87 |
| 17. | கலைஞரின் பராசக்தி திரைப்பட வசனம் ஒரு பார்வை <br> – விஜயலட்சுமி | 91 |
| 18. | தமிழ்த் திரைப்பாடல்கள் காட்டும் சமுதாய மரபுகள் <br> – வெ. கணேசன் | 95 |
| 19. | சித்தர்களின் உலகம் <br> – இர. இராஜராஜேஸ்வரி | 100 |
| 20. | அண்ணாரும் அரசியலும் <br> – ஹாஜா முஹினுதீன் | 104 |
| 21. | டி.கே.சி. ஜஸ்டிஸ் மகாராசனுக்கு எழுதிய மடல்கள் <br> – லி. செல்வமீனா | 107 |
| 22. | கவிசேஷ தென்றல் ராபர்ட் பாடல்களில் இறையியல் சிந்தனை <br> –தே. யோகவா | 110 |
| 23. | அம்பையின் படைப்பும் ஆளுமையும் <br> – கோ. பூர்ணிமா & முனைவர் க. சாந்தி | 113 |
| 24. | தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் வழி சிலப்பதிகாரம் <br> – செ. மஞ்சு & முனைவர் க. சாந்தி | 117 |

டுடே இதழ் (பன்னாட்டு ஆய்விதழ்)

ISSN : 2349 - 1914

# தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் வழி சிலப்பதிகாரம்

**செ. மஞ்சு**

பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்

முனைவர் சு.சாந்தி

உதவிப் பேராசிரியர் & நெறியாளர், தமிழ்த்துறை,

வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,

பல்லாவரம் சென்னை –600117.

## முன்னுரை

தொல்காப்பியம் என்ற அரும்பெரும் முதன்மை நூலை ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியன் எனப் போற்றப்பெறும் தொல்காப்பியர் இயற்றினார்.இது இடைச்சங்க காலத்தில் எழுதப்பட்டது.எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று பெரும் அதிகாரங்களைக் கொண்டுள்ளது.இதில் பொருளதிகாரத்தை அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என ஒன்பது இயல்களாக தொல்காப்பியர் அமைத்துள்ளார்.மெய்ப்பாட்டியல் உறுப்புகளில் சிலப்பதிகாரக் காப்பியத்தை இக்கட்டுரையில் காண்போம்.

## தொல்காப்பியம்

தமிழ் மொழியில் தோன்றிய இலக்கண நூல்களுள் முழுமையாகக் கிடைக்கப்பெற்ற முதன்மையான நூல் தொல்காப்பியம். திருக்குறளுக்கும் சங்கத்தொகைப் பாடல்களுக்கும் முற்பட்ட வழக்காறுகளைக் கொண்டுள்ளதால் தமிழ் ஆய்வாளர்கள் இதனைத் தமிழின் முதல் இலக்கண நூல் என்று போற்றுகின்றனர்.

பண்டைத் தமிழர்களின் வாழ்க்கையை அறிந்து கொள்ள துணை புரிவது தொல்காப்பியம் ஆகும்.தொல்காப்பியரின் காலத்தை அறிந்து கொள்ள பனம்பாரனர் எழுதிய தொல்காப்பிய சிறப்புப் பாயிரம் துணைபுரிகிறது.தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களும், ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஒன்பது இயல்கள் என இருபத்தியேழு இயல்களைக் கொண்டுள்ளது. எழுத்ததிகாரம்–483, சொல்லதிகாரம் –463, பொருளதிகாரம் –664 என மொத்தம் 1610 நூற்பாக்களைக் கொண்டுள்ளது.

## தொல்காப்பியத்தின் தனிச்சிறப்பு

தமிழ் இலக்கிய வரலாற்றில் தொல்காப்பியத்திற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு.தொல்காப்பியம் எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் கூறுவதோடு பொருளுக்கும் இலக்கணம் கூறுவது தனிச்சிறப்பாகும்.மக்கள் வாழ்க்கை எவ்வாறு இலக்கிய மயமாக்கப்படுகிறது என்பதைக் கூறுவதே பொருள் இலக்கணமாகும்.இது வேறு மொழி இலக்கியங்களில் காணப்படாத புதுமையாகும்.

## மெய்ப்பாடு தோற்றம்

மனிதர்கள் தோன்றிய நாள் முதல் மெய்ப்பாடு காணப்படுகின்றது.அதன் வளர்ச்சி சிறப்பாக இருந்தது என்பதற்குத் தொல்காப்பியர் தனது பொருளதிகாரத்தில் மெய்ப்பாட்டியலுக்கான ஒரு தனி இயலை வகுத்திருப்பதைக் கூறலாம். மெய்ப்பாடுகளானது பொறிவாயிலாகப் பெறும் அகவுணர்வுகளோடும், உணர்ச்சிகள் ஓடும், நெருங்கிய புறவுடற்கூறுகளோடும் தொடர்புடையனவாகும். ஐம்பொறிகளின் இயல்பினையும், உணர்வுகளின் தோற்றத்தையும், உணர்வுகளின் எழுச்சியையும் அவற்றோடு புறவுடல் தொடர்பு ஆகியவற்றையும் ஒருவன் அறிவானாயின் மெய்ப்பாடுகளைப் புரிந்து கொள்ள அவனுக்கு அவை சிறப்பாக அமையும்.

**மெய்ப்பாடு**

உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகள் உடலின் வழியாக வெளிப்பட்டுத் தோன்றும். அவ்வாறு உணர்வுகள் வெளிப்படும் விதமே மெய்ப்பாடு எனப்படுகிறது. மெய்ப்பாடு எட்டு வகைப்படும் என தமிழர்கள் கண்டனர். இம்மெய்ப்பாட்டை வடநாட்டவர்கள் ஒன்பதாக்கிக் கொண்டனர். அதனை அவர்கள் நவரசம் என்று பெயரிட்டு அழைத்தனர். மெய்ப்பாட்டின் இயல்பை,

**"உய்த்துணர் வின்றித் தலைவரு**
**பொருண்மையின்**
**மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்"**
**(தொல்.பொருள்.செய்யுளியல்–4)**

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். உணர்ச்சிகளைச் செய்யுளில் புலப்படக் கூறுவது மெய்ப்பாடு என்பது புலனாகிறது. பேச்சுக்கள் உள்ளத்தில் எழும் எண்ணங்களின் வெளிப்பாடுகளாக இருப்பதால் அவற்றை மெய்ப்பாடுகள் எனலாம். மெய்ப்பாடு என்பது இயல்பாக எழும் உள்ளக் கிளர்ச்சியின் வெளிப்பாடாகும். இதனை,

**"மெய்யில்கண் தோன்றுதலின்**
**மெய்ப்பாடாயிற்று"**
**(தொல்.பொருள்.செய்யுளியல்.3)**

என்று இளம்பூரணர் குறிப்பிடுகின்றார். செய்யுளுக்குரிய உறுப்புக்களுள் இன்றியமையாதது மெய்ப்பாடு ஆகும். அது பாடு என நீண்டு முதனிலைத் திரிந்த தொழிற்பெயராகின்றது.

மெய்+படு=மெய்ப்படு(மெய்ப்பாடு)

மெய்(உடல்) படு(தோன்றுதல்)

அதாவது, உணர்ச்சி மெய்யில் புறத்தே புலப்படுத்தும் நிலை மெய்ப்பாடு எனலாம். தொல்காப்பியம்,

**"கண்ணினும் செவியினும் திண்ணிதின்**
**உணரும்**
**உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்**
**நன்னயப் பொருள்கோள் எண்ணருங்**
**குரைத்தே"**
**(தொல்.மெய்ப்பாட்டியல்.27)**

என்று மெய்ப்பாட்டியலுக்கு இலக்கணம் வகுக்கின்றது. கண்களாலும், செவிகளாலும் மெய்ப்பாடுகள் உணர்த் தக்கனவாக இருக்க வேண்டும் என்பன தொல்காப்பியம் தரும் மெய்ப்பாட்டிற்கான வரையறைகள் ஆகும். மெய்யின்கண் படும் பாடு மெய்ப்பாடு என்று பொதுவில் மெய்ப்பாடு என்பதற்குப் பொருள் கொள்ளலாம். தொல்காப்பியம் எட்டு வகை மெய்ப்பாடுகளை,

**"நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை யென்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப"**
**(தொல்.மெய்ப்பாட்டியல்.3)**

இந்நூற்பா வழியாக விளக்குகின்றது.

**நகை**

மகிழ்வால் பிறக்கும் அக உணர்வு நகை ஆகும். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதனை உறுதிப்படுத்துவதாக அமைந்த மெய்ப்பாடு இதுவாகும். முகத்தில் ஏற்படும் புன்னகையின் வேராக அமைந்தது நகை என்னும் மெய்ப்பாடு ஆகும். நகை என்பது எள்ளல் இளமை பேதைமை மடன் என்னும் நான்கு உணர்ச்சிகளின் வழியாகத் தோன்றும். இதனை,

**"எள்ளல் இளமை பேதைமை மடன் என்று**
**உள்ளப்பட்ட நகை நான்கென்ப"**
**(தொல்.மெய்ப்பாட்டியல்–4)**

என தொல்காப்பியர் நகைக் குறிப்புகளைக் குறிப்பிடுகின்றார். நகை தோன்றும் இடங்களை இருபத்திரண்டு என்பர். சிரிப்பின் வளத்தை உணர்ந்து மகிழும் ஆற்றல் மனித மனத்திற்கு உண்டு.

எள்ளல் என்பது பிறரை இகழாது நகைத்தல் ஆகும். இளமை என்பது மழலை மாறாதத் தன்மையாகும். பேதமை என்பது அறிவு இல்லாமை, உய்த்துணராமை, ஒரு செயல் செய்வதற்குரிய அறிவின்மை. மடன் என்பது அறியாமை. ஒரு செயல் பற்றிய அறிவிருந்தும் செய்ய வகையறியாமை ஆகும்.

நகைப்பு வெளிப்பட நிகழ்வதற்கும், அகத்தே உண்டாவதற்கும், நகைச்சுவையை

ISSN : 2349 - 1914

மிகுவித்தற்கும், குறைத்தற்கும் நகைப்பின் தன்மையை மாற்றி விடுவதற்கும் மனநிலையே காரணமாகும்.உள்ளக்கிளர்ச்சிக்கு நகை துணை நல்குகிறது.சிரிப்பு உடல் நலத்திற்கு ஏற்ற நல்ல மருந்து.இதனை,

**"இடுக்கண் வருங்கால் நகுக அதனை**
**அடுத்தூர்வது அஃதொப்பது இல்"**
**(திருக்குறள்–621)**

என்று வள்ளுவர் இவ்வாறு உரைக்கிறார்.நகை அறிவோடு தொடர்புடையது. சிந்தனையைத் தூண்டி, உள்ளத்திற்கும் உடலுக்கும் பயன் விளைவிக்கிறது. இரத்த ஓட்டத்தை வேகப் படுத்துகிறது. உடல் நலத்திற்கு தேவையான சூழ்நிலையை நகை உண்டாக்குகின்றது. மக்களை மகிழ்விப்பது நகை.மக்களுக்கே உரியது. விலங்கு மற்றும் ஏனைய உயிர்களுக்குச் சிரிப்பு என்னும் ஒரு மெய்ப்பாடு பொருந்தாது.

**அழுகை**

மனித நெஞ்சத்தின் ஆழமான, நீங்காத உணர்வு அழுகை ஆகும்.இது இளிவு, இழவு, அசைவு, வறுமை என்ற நான்கு உணர்ச்சிகளின் காரணமாகத் தோன்றும் என்பதை,

**"இளிவே இழவே அசைவே வறுமையென**
**விளிவில் கொள்கை அழுகை நான்கே"**
**(தொல்.மெய்ப்பாட்டியல்.5)**

இதன் வழியாக அறியலாம்.இம்மெய்ப்பாடு நகைக்கு எதிரானது. மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்தது. வாழ்க்கையில் கவலையை வளர்க்கும் துன்பம் கலையுலகில் கவலையைத் தீர்க்கும் மருந்தாக உள்ளது என்றும் அவலம் உள்ளச் சுமையைக் குறைப்பதற்கு உறுதுணையாகிறது.

இளிவு என்பது பிறரால் இழகப்பட்டு எளியனாதல். இழவு என்பது உயிர் உள்ளிட்ட உடைமைகளை இழத்தல். அசைவு என்பது தன்னிலையில் தாழ்தல். வறுமை என்பது செல்வமற்ற நிலையைக் குறிக்கும்.

**இளிவரல்**

உயிர் வாழப் பற்றுக்கோடற்ற நிலையில் ஏற்படும் தாழ்வு நிலைமை இளிவரல் என்று கொள்ளலாம். நாணத்தக்க செய்கைகளால் இச்சுவை பிறக்கிறது.இம்மெய்ப்பாடு மூப்பு,பிணி, வருத்தம், மென்மை என்ற நான்கு வகை உணர்ச்சிகளின் காரணமாகத் தோன்றும். இதனை,

**"மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு**
**யாப்புற வந்த இளிவரல் நான்கே"**
**(தொல்.மெய்ப்பாட்டியல்–6)**

இந்நூற்பா வழியாக அறியலாம்.இளிவரல் என்பதை இழிப்பு, இளிவு, இழிபு எனப் பல வகைப்படுத்துவர்.அழுகை மெய்ப்பாடு பிறக்கக் காரணமானவைகளில் ஒன்றான இளிவு என்பது இளிவரல் மெய்ப்பாட்டியலிருந்து சற்று மாறுப்பட்டதாகக் காட்டுவர் உரையாசிரியர்கள். இளிவரல் இறப்பவலத்திற்கு வழி கோலும். ஆனால் இறப்பதற்கு வழிகோலாது.

மூப்பு என்பது முதுமை காரணமாகத் தோன்றும் தளர்ச்சி, பிணி என்பது நோய், வருத்தம் என்பது பயன் விளையாத வீண் முயற்சி, மென்மை என்பது எளிமை, இயலாமை, ஆற்றலும்,பொருளும் இன்றி எளியவராகும் நிலைமை.இவை நான்கும் தன் கண்ணும், பிறர் கண்ணும் தோன்றும்.

இளிவரல் –அழுகை இல்லாத அல்லது மேலோங்கி மறைந்த நிலையில் தாழ்வு உணர்ச்சியாக நிற்கின்றது. இளிவு–இளிவரல் இரண்டும் பொருளால் தொடர்புடையன என்பதை உணர்ந்தே தொல்காப்பியர் இரு நூற்பாக்களில் நடுவே வைத்துள்ளார்.

**மருட்கை**

மனித உள்ளத்தில் ஏற்படும் தடுமாற்ற உணர்வு மருட்கை ஆகும்.மயக்கத்தைத் தரும் இவ்வுணர்வினைத் தொல்காப்பியர் மதிமை சாலா மருட்கை என்கிறார். இதற்கு அறிவினை உலக வழக்கினுள் நின்றவாறு நில்லாமற் றிரித்து வேறுபடுத்து வருவதென்றவாறு என்று பேராசிரியர் விளக்கம் தருகின்றார். புதிதாக கண்டவற்றால் புதுமை என்னும் பொருளில் மருட்கை தோன்றும் என்கிறார் தொல்காப்பியர். புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்னும் நான்கிடத்தும் அறிவு நிரம்பப்பெறாத வியப்புத் தோன்றும். இதனை,

ISSN : 2349 - 1914



**“புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு மதிமை சாலை மருட்கை நான்கே”**

**(தொல்.மெய்ப்பாட்டியல்–7)**

என்று தொல்காப்பியம் வழி காணலாம்.புதுமை என்பது முன்னர் கண்டிராத அல்லது கேட்டிராத நிலை ஆகும்.பெருமை என்பது அளவில் பெருத்தன கண்டு வியத்தல்.சிறுமை என்பது சிறியன கண்டு வியத்தல்.ஆக்கம் என்பது செயற்கையில் தோன்றும் வியப்பாகும்.வியப்பின் போது கண்ணிமைகள் உயருகின்றன.வாய் அகலத் திறக்கின்றது.நெற்றியில் குறுக்கு வளையல்கள் தோன்றுகின்றன.மூக்கின் மேல் விரல் வைக்கப்படுவது நிகழும்.

**அச்சம்**

மனித மெய்ப்பாடுகளுள் எல்லோரும் ஆட்படுகின்ற, தவிர்க்க முயலுகின்ற மெய்ப்பாடு அச்சம் ஆகும்.மனித வாழ்வில் சின்னஞ்சிறு குழந்தைப் பருவம் முதல் எல்லா வயதினரிடத்தும் இம்மெய்ப்பாடு எளிதாக நிகழ்வதுண்டு.இதனை,

**“அணங்கே விலங்கே கள்வர் தம்இறை எனப் பிணங்கல் சாலா அச்சம் நான்கே”**

**(தொல்.மெய்ப்பாட்டியல்–6)**

என தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. அணங்கு, விலங்கு, கள்வர், இறை என்னும் நான்கு உணர்ச்சிகளால் அச்சம் என்ற மெய்ப்பாடு பிறக்கும் எனத் தொல்காப்பியர் உரைக்கின்றார். இம்மெய்ப்பாடு உயிரோடு ஒருங்கிணைந்த ஒன்றாகும்.

அணங்கு முதலான நான்கினும் அச்சம் பிறக்கும். கொலை, களவு, காமம், பொய் என்பவற்றை நிகழ்த்தினவர்க்கு அரசனால் அச்சம் வருதலின் அவனும் அஞ்சப்படும் பொருளாயினன்.

அணங்கு என்பது எதிர்ப்பட்டாரை வருத்தும் பேய், பூதம் போல்வன. விலங்கு என்பது வேங்கை, பாம்பு, யானை முதலிய கொடிய விலங்குகள். கள்வர் என்பவர் கொலை செய்தும் கொடுந்தொழில் புரிந்தும் பிறர் பொருள் கவர்பவர். இறை எனப்படுவோர் தந்தை, ஆசிரியன், அரசன், வழிபடு தெய்வம் ஆகியோர்.

மனிதனின் உணர்ச்சி மயமான வாழ்வில் அச்சம் மிக இன்றியமையாத இடம் வகிக்கிறது. இந்த அச்சம் என்பது ஓர் ஆற்றல், அதே சமயத்தில் ஒரு நோயும் கூட. அச்சத்தின் விளைவாகத் தம் பண்புகளை மாற்றிக்கொள்ளும் மனிதர்களின் விதியையும் மாற்ற வல்லது அச்சம்.

**பெருமிதம்**

பெருமிதம் என்ற மெய்ப்பாடு தான் தனிமனிதனும், சமூகமும் தலைநிமிர்ந்து நிற்பதற்கு அடிப்படையாக உள்ளது. முதுகெலும்பு வீரியத்தோடு கம்பீரமாக நடை போடுவதற்கு இந்த பெருமித உணர்வுதான் இன்றியமையாதது ஆகும். நம் சங்க காலப் புலவர்களில் பெரும்பான்மையோர் பெருமித மெய்ப்பாட்டில் அமைந்த பாடல்களையே மிகுதியாக எழுதிக் குவித்துள்ளனர்.

**“கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச் சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே”**

**(தொல்.மெய்ப்பாட்டியல்.8)**

எனும் தொல்காப்பிய நூற்பாவிற்குப் பேராசிரியர், எல்லாரொடும் ஒப்பநில்லாது பேரெல்லையாக நிற்றல் பெருமிதம் எனப்படும் என்று உரை தருகின்றார்.

பெருமிதம் என்ற மெய்ப்பாடு கல்வி, தறுகண், புகழ், கொடை என்னும் நான்கு உணர்ச்சிகளால் இம்மெய்ப்பாடு தோன்றுகிறது. எடுப்பான தோற்றம், பீடு நடை முதலானவைப் பெருமிதத்தின் அறிகுறிகளாகும்.மனிதன் தான் ஒவ்வொரு நிலையிலும் மற்றவர்களைக் காட்டிலும் மேம்பட்டு விளங்க விழைகின்றான்.

கல்வி என்பது தவ முதலாகிய வித்தை, தறுகண் என்பது அஞ்சத் தக்கன கண்டு அஞ்சாமையாகிய வீரம், புகழ்மை என்பது பழியோடு செய்யாமையாகிய புகழ்ச்சித் திறம், கொடை என்பது உயிர், உடம்பு,உறுப்பு எல்லாமும் கொடுத்தல் ஆகும்.

விழைவு நிறைவேறும் போது மன மகிழ்ச்சியோடு எடுப்பான தோற்றத்தையும், நேர் கொண்ட பார்வையினையும், பீடு நடையினையும் கொண்டு பெருமிதம் அடைகின்றான்.

ISSN : 2349 - 1914

**வெகுளி**

உலக வாழ் உயிர்களிடத்தும் வெகுளி தோன்றுவதுண்டு. வெகுளி உயிர்களிடையே சண்டை நேர்வதற்கு அடிப்படை காரணமாகின்றது. இம்மெய்ப்பாடு உறுப்பறை, குடிகோள், அலை, கொலை என்னும் நான்கு உணர்ச்சிகளால் பிறக்கிறது. இதனை,

**"உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற வெறுப்ப வந்த வெகுளி நான்கே"**

**(தொல்.மெய்ப்பாட்டியல்–9)**

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. வெகுளி பல வழிகளில் மறைந்து நிற்கும் என்றும், அது மொழி, செயல், உடல், எதிர் விளைவுகள், நிகழ்ச்சிகள் என்னும் நான்கு முறைகளில் வெளிப்படுகிறது என்றும் உரைப்பர்.

உறுப்பறை என்பது உறுப்பைக் குறைத்தல். குடிகோள் என்பது பிறரது குடிப்பிறப்பின் உயர்வுக்கும், அவருடைய சுற்றத்தாருக்கும் கேடு சூழ்தல்.அலை என்பது கோல் கொண்டு அடித்தல், வருத்துதல், கொலை என்பது பிறருடைய அறிவு, புகழ் முதலிய நன்மைகளை அறிந்து பேசுதல் ஆகும்.

வெகுளி வயப்பட்டோர் உள்ளம், உடல் இவற்றில் எண்ணற்ற மாறுபாடுகள் நிகழ்கின்றன. வெகுளி வயப்பட்டோர் தம் நிலையை இழந்து உள்ளம் படபடக்க மனம் போன போக்கில் குமுறிப் பேசிவிடுவதைக் காண்கிறோம். முகமும் கண்ணும் சிவக்கக் காண்கிறோம். பல்லால் உதட்டைக் கடிப்பர். புருவந்துடிக்கும், விரல்கள் நெறிப்பர், இம்மாறுபாடுகளை, இதயமும் இரத்த ஓட்டமும் எப்போதும் வெகுளியின் போது பாதிப்படைகின்றன. முகம் சிவக்கின்றது. நெற்றியிலும் கழுத்திலும் உள்ள குருதி நாளங்கள் புடைக்கின்றன.

**உவகை**

மனித மனத்தின் உச்சக்கட்ட மகிழ்ச்சி உவகை ஆகும். உவகை என்ற மெய்ப்பாட்டையே அனைவரும் எப்போதும் நிலைத்திருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். உவகை என்பது மகிழ்ச்சி, இன்பம், களிப்பு எனவும் பொருள்படும். இம்மெய்ப்பாடு செல்வம், புலன், புணர்வது, விளையாட்டு என்னும் நான்கு உணர்ச்சிகளால் பிறக்கும் என்பதனை,

**"செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என் அல்லல் நீத்த உவகை நான்கே"**

**(தொல்.மெய்ப்பாட்டியல்–10)**

இவ்வாறு தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. துன்பத்தை விலக்கிய உவகையானது செல்வ நுகர்ச்சி, ஐம்புலன்களால் நுகர்தல், காம நுகர்ச்சி, விளையாட்டு ஆகிய நான்கு வகைகளாலும் உண்டாகும்.பிறர் கண்டு பிறக்கும் உவகையன்று என்பது, அல்லல் நீத்த உவகை என்பதால் புலனாகிறது. காதல் பாடல்கள் உவகை நிரம்பியவையாகும்.

செல்வம் என்பது செல்வ நுகர்ச்சி யையும், புலன் என்பது புலமையால் ஏற்படும் அறிவு முதிர்ச்சியையும், புணர்வு என்பது காமப் புணர்வையும், விளையாட்டு என்பது ஆறு, குளம், சோலையில் தங்கி விளையாடலையும் குறிக்கும். உலகியல் வாழ்வில் பிறரது துன்பத்தினைக் கண்டு கீழ் மக்கள் அடையும் போலி மகிழ்ச்சி உண்மையான மகிழ்ச்சியாகாது என அறிவுறுத்தும் நோக்கில் அல்லல் நீத்த உவகை என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

**சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றானதும், சாதாரண குடிமக்களின் வாழ்க்கை விவரிக்கும் நூலாகவும் உள்ள தமிழின் சிறந்த நாடகக் காப்பியமாகும். இந்நூல் மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளையும், கலைத் தொடர்பான பல விடயங்களையும் நமக்கு அள்ளித் தருகிறது. சிலப்பதிகாரம் ஓர் துன்பியலான முடிவினைக் கொண்டுள்ள காப்பியம்.

**நகை**

நகை என்பது மெய்ப்பாடுகளில் முதலாவதாக உள்ளது. இதற்கு சிரிப்பு என்பது பொருள். எதிர்மறையான முடிவினைக் கொண்டுள்ள இக்காப்பியத்தில் ஒரு சில

இடங்களிலேயே நகை என்னும் மெய்ப்பாடு வெளிப்பட்டுள்ளது.

**"மன்பெருஞ் சிறப்பின் மாநிதிக் கிழவன்
ஏற்றெழுந் தனன்யா னென்றவள் கூற"**

**(கொலைக்களக் காதை–75–80)**

என்னும் வரிகள் கண்ணகியின் பொய்மை கலந்த நகையை விளக்குகிறது.

**அழுகை**

நகையைத் தொடர்ந்து வரக்கூடிய மெய்ப்பாடாக அழுகை உள்ளது.இங்கு அழுகை என்பது கவலை, வறுமை,இளிவு போன்றவற்றைக் குறிக்கிறது.சிலப்பதிகாரத்தில் இம்மெய்ப்பாட்டின் பங்கு அதிகமாக உள்ளது.இதுவே இக்காப்பியத்தின் சிறப்பாகும்.

**இளிவரல்**

இளிவரல் என்பது மூன்றாம் மெய்ப்பாடு. இது இழிவு, தாழ்வு போன்ற நிலைகளைக் குறிக்கிறது. கோவலனை கொல்ல வந்த கொலையாளிகள் அவனை கள்வன் என்று நம்ப இயலாமல், கொல்லனின் நடிப்பைப் பார்த்து குழப்பமடைந்துள்ளனர். அந்நேரத்தில் மயக்கத்தில் இருந்த கொலையாளி ஒருவன் கோவலனை வெட்டி விடுகின்றான் என்ற இழிவு நிலை இங்கு வெளிக்காட்டப்படுகிறது.

**மருட்கை**

மருட்கை என்பது வியப்பு, ஆச்சரியம் எனப் பொருள்படும்.புதுமையைக் காணுதல் போன்ற நிலைகளில் மருட்கை என்னும் மெய்ப்பாடு வருகிறது.

**"ஆயர் பாடியின் அசோதைபெற் றெடுத்த
விழுமந் தீர்த்த விளக்குக் கொல்லென"**

**(கொலைக்களக்காதை–46–51)**

என்ற வரிகள் மாதிரியின் ஊர் மக்கள் கண்ணகியின் அழகினை வியந்து பார்ப்பதைப் பற்றி விளக்குகின்றது.

**அச்சம்**

அச்சம் என்பது பொதுவாகப் பயத்தினைக் குறிக்கும் சொல்லாக உள்ளது. அழுகை என்னும் மெய்ப்பாட்டின் பயன் இக்காப்பியத்தில் பல இடங்களில் உள்ளதைப் போல, அச்சத்தின் பயன்பாடும் பல இடங்களில் உள்ளது. இவை, மேலும் இக்காப்பியத்தை சுவையூட்டும் விதமாக இளங்கோவடிகளால் இயற்றப்பட்டுள்ளது.

**"அடர்ந்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளே"**

**(வழக்குரைக்காதை–34–43)**

என்ற வரிகள் அரண்மனையின் வாயிற்காவலனின் பயத்தினை வெளிக்காட்டுகின்றது.

**பெருமிதம்**

பெருமிதம் என்ற சொல்லானது மெய்ப்பாட்டியலில் வீரம், தறுகண் போன்ற பொருள்களைக் கொண்டதாக அமைகின்றது. பெருமித மெய்ப்பாடு சிலப்பதிகாரக் காப்பியத்தில் அழகாக கையாளப்பட்டுள்ளது. பல இடங்களில் மூவேந்தர்களின் பெருமிதங்களையும், வீரத்தையும், கொடைப் பண்புகளையும் கூறுகிறது. இதுவே பெருமித மெய்ப்பாட்டைக் காட்டுகிறது.

**வெகுளி**

வெகுளி என்பது சினம், கோபம், ரௌத்திரம் போன்ற பொருள்களைக் கொண்டதாக அமைகிறது. எதிர்மறை முடிவைக் கொண்டுள்ள சிலப்பதிகாரத்தில் பல சினங்களைத் தொடர்ந்து, தன்னிலை மறந்து செய்த செயல்கள் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**"வாயிலோயே! வாயிலோயே!
யறிவிப் பாயே!யறிவிப்பாயே!"**

**(வழக்குரைக் காதை–24–29)**

என்ற வரிகள் கண்ணகியின் பெருஞ்சினம் வெளிப்படுத்தப் படுகிறது.

**உவகை**

மகிழ்ச்சி எனும் பொருளைக் கொண்டதே உவகை ஆகும். சிலப்பதிகாரத்தில் பரவலாக ஆங்காங்கே மன்னர்களின் வெற்றி, கொடைத்தன்மை போன்ற செயல்களை மக்கள் கொண்டாடி மகிழ்ந்து வாழ்ந்து வந்ததைப் பற்றியக் குறிப்புகள் உள்ளன.

 ISSN : 2349 - 19

"மாயிரும் பீலி மணி நிற மஞ்ஞைநின்
உடனுறைவு மரீஇ ஒருவா ஆயின்"
(மனையறம் படுத்த காதை–53)

என்ற வரிகள் கண்ணகியின் அழகை வர்ணித்து அந்த காதலுடன் மனமகிழ்ந்து இருவரும் வாழ்ந்து வந்ததை வெளிக்காட்டுகிறது.

**முடிவுரை**

தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள மெய்ப்பாடுகள் நாட்டியத்திற்கு முக்கிய உயிராக விளங்குகின்றது. மெய்ப்பாடுகள் மனித இனத்தை வைத்தே வெளிப்பட்டன. மனிதனுக்கு மனிதன் நெஞ்சம் வேறுபடுவது போல் மெய்ப்பாடும் வேறுபடுகிறது. மெய்ப்பாட்டை அவரவர் மனநிலைக்கு ஏற்ப வெளிப்படுத்துவர் என்பதை இக்கட்டுரையின் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது.